தூதுவர் ஜுலீ ஜே. சங்
இந்தோ-பசுபிக் தொலைநோக்கு மாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள் (KDU இனால் நடத்தப்பட்டது)
2022, மார்ச் 31

இன்றைய மாநாட்டில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் வணக்கம் மற்றும் மிக்க நன்றி.

இந்த காலத்திற்குப் பொருத்தமான கலந்துரையாடலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டதற்காக ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கும் (KDU) மற்றும் எம் அனைவரையும் ஒன்றுகூட்டுவதற்காக கடின உழைப்பினை மேற்கொண்ட, எமது மாநாட்டு ஏற்பாட்டாளர்களான KDU இன் மூலோபாயக் கற்கைகள் துறையைச் சேர்ந்த கலாநிதி ஹரிந்த விதானகே மற்றும் கலாநிதி சனத் டி சில்வா ஆகியோருக்கும் நான் குறிப்பாக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்று இங்குள்ள அனைத்து KDU மாணவர்களுக்கும் நான் எனது வணக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன் - நீங்கள் தான் எதிர்காலம். விசேடமாக பாதுகாப்பு ஆராய்ச்சியாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் உள்ளகப் பயிலுனர்களாக இருக்கும் இளம் பெண்கள். பெண்கள் வரலாற்று மாதத்தின் இந்த இறுதி நாளில், பெண்களின் பங்களிப்பு இல்லாமல் சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசிபிக் பற்றிப் பேச முடியாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு குழு உறுப்பினர்களே, பங்கேற்பாளர்களே, துணைவேந்தர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் அவர்களே, இந்தோ-பசுபிக் தொடர்பான எமது பகிரப்பட்ட தொலைநோக்கு பற்றிய இக்கலந்துரையாடலை மேற்கொள்வதற்கு இதை விட மிகவும் பொருத்தமான நேரம் இருக்க முடியாது, ஏனெனில் பைடன்-ஹரிஸ் நிர்வாகமானது இந்தோ-பசுபிக் பகுதியில் முன்னோக்கிய எமது புதிய பயணத்தினை தயார் செய்துகொண்டிருக்கிறது. முக்கியமான கப்பல் பாதைகளுக்கு அருகே தனது முக்கிய புவிசார் மூலோபாய அமைவிடத்தைக் கொண்டுள்ள இலங்கையானது, இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் ஒரு முக்கிய தலைமைப் பாத்திரத்தைக் கொண்டுள்ளமை தொடர்பில் உண்மையான பெருமை கொள்ள வேண்டும். கடந்த வாரத்தில்தான், இராஜாங்கத் திணைக்களத்தின் உயர் பதவியில் இருக்கும் அதிகாரிகளில் ஒருவரான அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நூலண்ட், கொழும்புக்கு விஜயம் செய்து, இலங்கையுடனான ஒரு பங்காண்மை உரையாடலில் பங்கேற்றார். அதில் பரந்த அளவிலான பகிரப்பட்ட நலன்களில் இருதரப்பு பங்குதாரராக எமது உறுதிப்பாட்டை நாம் மீளவும் வலியுறுத்தினோம்.

பிராந்தியம் முழுவதிலுமுள்ள பல தசாப்த கால பங்காண்மையின் அடிப்படையிலமைந்த, சுதந்திரமான மற்றும் திறந்த, இணைக்கப்பட்ட, செழிப்பான, மீள்தன்மையுடைய மற்றும் பாதுகாப்பான ஒரு இந்தோ-பசுபிக் பிராந்தியமே எமது தொலைநோக்காகும். நான் இந்தோ-பசுபிக் பிராந்தியத்திற்கான "எமது" தொலைநோக்கு எனக் கூறுகிறேன், ஏனெனில் எனது நாடு மற்றும் இலங்கை உட்பட பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளால் இந்த தொலைநோக்கு பகிர்ந்து கொள்ளப்படுகிறது என நான் நம்புகிறேன். இந்தோ-பசுபிக் நாடுகளாக, நாம் பல பொதுவான நலன்களைப் பகிர்ந்து கொள்வதுடன் அந்த பகிரப்பட்ட நலன்களை மேம்படுத்துவதற்கு பல பொதுவான முயற்சிகளில் கூட்டாக ஈடுபடுகிறோம்.

கடந்த மாதம், பைடன் நிர்வாகம் எமது புதிய இந்தோ-பசுபிக் மூலோபாயத்தினை ஐந்து அடிப்படையான கூறுகளுடன் அறிவித்தது: ஒரு சுதந்திர மற்றும் திறந்த இந்தோ-பசுபிக் பிராந்தியத்தினை முன்னேற்றுதல்; பரந்த அடிப்படையிலான பிராந்திய செழிப்பை ஊக்குவித்தல்; ஒன்றுபட்ட கூட்டுத் திறனை உருவாக்குவதற்காக வலுவான தொடர்புகளை உருவாக்குதல்; நாடுகடந்த அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு பிராந்திய மீள்தன்மையினை கட்டியெழுப்புதல்; மற்றும் இந்தோ-பசுபிக் பாதுகாப்பை பலப்படுத்துதல். இந்த மூலோபாயம் ஒரு இராணுவ அல்லது பாதுகாப்பு கூட்டணி அல்ல, ஆனால் எமது பகிரப்பட்ட மதிப்பீடுகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நாடுகளின் நடத்தையை தீவிரமாக எடுத்துக்கொள்வதை உள்ளடக்கியது.

சுதந்திரமான மற்றும் திறந்த, செழிப்பான, இணைக்கப்பட்ட, மீள்தன்மையுடைய மற்றும் பாதுகாப்பான – போன்ற இக்கருத்துக்கள் கவர்ச்சிகரமானதாகத் தோன்றலாம், எனினும் சற்று சுருக்கமானவை. அக்கருத்துக்கள் ஒவ்வொன்றையும் விரிவாகத் தெளிவுபடுத்தவும் அவை எமது பகிரப்பட்ட நலன்களுடன் எவ்வாறு ஒத்திசைகின்றன என்பதை விளக்கவும் சில நிமிடங்களை எடுத்துக் கொள்ள விரும்புகிறேன். அவ்வாறு செய்கையில், இக்கருத்துக்களும் எமது கூட்டு முயற்சிகளும் இப்பகிரப்பட்ட தொலைநோக்கில் எவ்வாறு ஒன்றிணைகின்றன என்பது தெளிவாகும் என நான் நம்புகிறேன்.

"சுதந்திரமான மற்றும் திறந்த" இந்தோ-பசுபிக் என்ற கருத்துடன் ஆரம்பிப்போம். "சுதந்திரம் என்பது உங்கள் எதிர்காலத்தை எழுதுவதற்கான மற்றும் நீங்கள் யாராக இருந்தாலும் அல்லது உங்களுக்கு யாரைத் தெரிந்திருந்தாலும் அதைப்பற்றிக் கவலைகொள்ளாது, உங்கள் சமூகத்திலும் உங்கள் நாட்டிலும் என்ன நடைபெற வேண்டும் என்பதை தீர்மானிக்கும் ஆற்றல் என்பன பற்றியதாகும்." என செயலாளர் பிளிங்கன் விளக்கினார். கடந்த மாதத்தில், உக்ரைனில் மொஸ்கோ மேற்கொண்ட கொடூரமான நடவடிக்கைகள் அமைதி, பாதுகாப்பு மற்றும் இறையாண்மைக்கு இன்றியமையாத அடிப்படை சர்வதேசக் கொள்கைகளை களங்கப்படுத்தி, குறைமதிப்பிற்கு உட்படுத்திய சூழலில், சுதந்திரத்தின் தீவிர முக்கியத்துவத்தைப் பற்றிய ஒரு பயங்கரமான நினைவூட்டலை நாம் பெற்றுக்கொண்டோம். சர்வதேச ஒழுங்கின் அடிப்படையாக விளங்கும், அடிப்படை விதிகளான இக்கொள்கைகள், அதற்குரிய தேவைகள் எழுந்தபோது நாம் ஒன்றாக இணைந்து கட்டமைத்து, நிலைநிறுத்தி, பின்பற்றியவையாகும்.

"இணையவெளி மற்றும் திறந்த கடல்களில்" பண்டங்களும் கருத்துக்களும் சுதந்திரமாக பயணிக்க முடியும் என்பதையும் சுதந்திரம் என்பது குறிக்கும் என செயலாளர் பிளிங்கன் குறிப்பிட்டார். இன்றைய உலகில் இணையவெளி மற்றும் இணையப்பாதுகாப்பு என்பன அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளன, மற்றும் இந்தோ-பசுபிக் பகுதிக்கான எமது தொலைநோக்கின் ஒரு பகுதியாக, திறந்த மற்றும் பாதுகாப்பான இணையத்தை உறுதிசெய்யவும், இணையவெளியில் பொறுப்பான நடத்தைக்கான ஒரு கட்டமைப்பை செயற்படுத்தவும் பங்குதாரர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு ஐக்கிய அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

உலகின் கொள்கலன் கப்பல்களில் கிட்டத்தட்ட அரைவாசியும், உலகின் எண்ணெய்க் கப்பல்களில் மூன்றில் இரண்டு பங்கும் கடந்து செல்லும், உலகின் மிகவும் பரபரப்பான சில கப்பல் பாதைகளுக்கு அருகே இலங்கை அமைந்திருக்கிறது. சரக்குகள் திறந்த கடல் வழியாக சுதந்திரமாக பயணிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்துவது இலங்கைக்கு மிகவும் முக்கியமானதாகும். உலக வர்த்தகத்தின் ஆரோக்கியத்தில் இலங்கை முக்கிய பங்கு வகிக்கிறது என்பது இதன் பொருளாகும்.

ஆனால் கப்பல் போக்குவரத்தானது அனைத்து கப்பல்களுக்கும் "வழிசெலுத்துவதற்கான சுதந்திரத்துடன்" கடல்கள் சுதந்திரமானதாகவும் திறந்ததாகவும் இருப்பதில் தங்கியிருக்கிறது. வழிசெலுத்துவதற்கான சுதந்திரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களும் இன்றி, இலங்கை தனது புவிசார் மூலோபாய அமைவிடம் மற்றும் அதன் துறைமுக முதலீடுகளை செயற்திறனுடன் பயன்படுத்த முடியாது. அதனால்தான், சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை ஆதரிப்பதற்கான அமெரிக்காவின் வலுவான வழிசெலுத்துவதற்கான சுதந்திரம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் இலங்கையின் நலன்களுடன் நேரடியாக ஒத்திசைகிறது.

அதனால்தான் சுதந்திர மற்றும் திறந்த இந்தோ-பசுபிக் பிராந்தியத்தினை முன்னெடுப்பது எமது பகிரப்பட்ட தொலைநோக்கின் ஒரு பகுதியாக இருக்கிறது.

ஒரு **"செழிப்பான"** இந்தோ-பசுபிக் பகுதியை கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து பணியாற்றுவது எமது பகிரப்பட்ட தொலைநோக்கின் இரண்டாவது அடிப்படைக் கூறாகும். விசேடமாக இலங்கை மற்றும் இப்பிராந்தியம் எதிர்கொள்ளும் பொருளாதார சவால்களுக்கு மத்தியில் இது மிகவும் அவசியமானதாகும்.

2020 ஆம் ஆண்டில், அமெரிக்காவானது இந்தோ-பசுபிக் பிராந்தியத்துடன் 1.75 டிரில்லியன் டொலர் பெறுமதியான இருவழி வர்த்தகத்தினை மேற்கொண்டது. அதன் மூலம் இப்பிராந்தியம் முழுவதும் ஐந்து மில்லியனுக்கும் அதிகமான தொழில்வாய்ப்புகளுக்கு உதவிசெய்தது. அமெரிக்கா இலங்கையின் மிகப்பெரிய தனி நாட்டு ஏற்றுமதி சந்தையாக இருப்பதால் எமது இரு நாடுகளும் அத்தியாவசிய பொருளாதாரப் பங்குதாரர்களாகும். இலங்கை வருடாந்தம் ஏற்றுமதி செய்யும் 11.9 பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களில் கிட்டத்தட்ட 2.8 பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்கிறது. கொவிட் பெருந்தொற்றுக் காலத்திலும் இந்த எண்ணிக்கை அதிகரித்தது. மற்றும் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும் இலங்கை நிறுவனங்கள் 180,000 இற்கும் அதிகமான வேலை வாய்ப்புகளை வழங்குகின்றன.

இலங்கையின் இயற்கை வளங்கள் மற்றும் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு என்பன தொடர்பான மனப்பாங்கு மிகப்பெரிய பொருளாதார ஆற்றலை உருவாக்குகிறது. எவ்வாறாயினும், இந்த ஆற்றலை முழுமையாகத் திறப்பதற்கு, இலங்கையின் சொத்துக்களை சிறப்பாக இயக்கும் மற்றும் தனியார் துறை வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கும் வெளிப்படையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார சூழலைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியமானது. நிதி நிறுவனங்கள் மற்றும் பொது நிதிகளை வலுப்படுத்துவதற்கும், நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியைப் பேணுவதற்கும், அமெரிக்கா உட்பட சர்வதேச முதலீடுகளை ஈர்ப்பதற்கும் அவசியமான கொள்கைகளை விருத்திசெய்வதில் ஒத்துழைக்க நாம் உறுதிபூண்டுள்ளோம்.

அமெரிக்க அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு மற்றும் மனித மூலதன அபிவிருத்தியினை ஊக்குவிக்கும் ஏனைய முகவரமைப்புகள் ஊடாக குறிப்பிடத்தக்க வளங்களுடன் இந்த உறுதிப்பாட்டை நாம் பலப்படுத்தியுள்ளோம். உதாரணமாக, பிரதானமாக பெண்களுக்குச் சொந்தமான வணிகங்களை முதன்மைப்படுத்தி, சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களை மேம்படுத்துவதற்கு நிதியளிப்பினைப் பயன்படுத்தும் தனியார் இலங்கை வங்கிகளுக்குக் கடன்களை வழங்குவதன் ஊடாக, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது, 20 மில்லியன் டொலர்களுக்கும் குறைவாக இருந்த தனது

செயற்பாடுகளை 2021 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 300 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது.

2021 ஒக்டோபர் மாதம் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து நடத்திய இந்தோ-பசுபிக் வணிக மன்றம், 2,300 இற்கும் மேற்பட்ட வணிக மற்றும் அரசாங்க தலைவர்களை ஒன்றிணைத்து, புதிய தனியார் துறை திட்டங்களில் கிட்டத்தட்ட 7 பில்லியன் டொலர்களை திரட்டியது. எதிர்காலத்தில் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதி ஸ்திரத்தன்மை ஆகியவற்றை நோக்கிய இலங்கையின் பயணத்திற்கு உதவிசெய்வதற்கும் இலங்கையில் அதிக வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை அபிவிருத்தி செய்வதற்கும் நாம் தொடர்ந்து முயற்சி செய்தல் வேண்டும்.

பசுமை ஆற்றல் செயற்திட்டங்களின் அபிவிருத்திக்கு உதவிசெய்வதென்பது நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய செழிப்பைக் கட்டியெழுப்புவதற்கு முக்கியமானதாகும். இந்தோ-பசுபிக் பிராந்தியத்திற்கான எமது தொலைநோக்கானது தூய்மையான எரிசக்தி எதிர்காலத்திற்கு மாறுவதற்கு உதவிசெய்வதற்காக பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றுவதை உள்ளடக்கியதாகும். இலங்கையில், மின்சாரத் துறையினை சந்தை அடிப்படையிலானதாகவும், பாதுகாப்பானதாகவும், நம்பகத்தன்மையுடையதாகவும், மற்றும் நிலையானதாகவும் மாற்ற உதவுவதற்காக USAID ஆனது இலங்கை அரசாங்கத்துடன் ஐந்து வருட, 18.9 மில்லியன் டொலர் பெறுமதியான ஒரு எரிசக்திப் பங்காண்மையினைக் கொண்டுள்ளது. இச்செயற்திட்டமானது மூலதனத்திற்கான அணுகலை எளிதாக்குவதுடன் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதை அதிகரிப்பதற்கான முதலீடுகளையும் ஈர்க்கிறது. இது மின்சார ஒழுங்குமுறையில் தனியார் துறையின் வகிபாகத்தினை விரிவுபடுத்துகிறது, போட்டித்தன்மையினை அதிகரிக்கிறது மற்றும் ஆற்றல் திறன் தரநிலைகளை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கிறது.

அவ்வாறுதான் ஒரு செழிப்பான இந்தோ-பசுபிக் பிராந்தியத்தினை நாம் ஒன்றிணைந்து கட்டியெழுப்புகிறோம்.

அடுத்ததாக, எமது இந்தோ-பசுபிக் தொலைநோக்கிற்கு உதவிசெய்வதற்காக **“தொடர்புகளை”** எவ்வாறு உருவாக்கப் போகிறோம் என்பதைப் பற்றி விவாதிக்க விரும்புகிறேன்.

எமது தனிநபர் மற்றும் கூட்டுப் பொருளாதாரப் பாதுகாப்பு என்பது, பெருமளவிற்கு, இந்தோ-பசுபிக்கிற்குள்ளும் அதற்கு அப்பாலும் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கான எமது திறனின் அடிப்படையிலே அமைந்திருக்கும். குறிப்பாக நாடுகளுக்கு இடையிலான விநியோகச் சங்கிலிகளை நோக்கும்போது இவ்விடயம் தெளிவாகத் தெரிகிறது. தடைகளை நீக்கி வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் அதேவேளை, மீள்தன்மையுடைய மற்றும் பாதுகாப்பான விநியோகச் சங்கிலிகளை முன்னேற்றுவதற்கு எமது பங்குதாரர்களுடன் தொடர்ந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை எமது இந்தோ-பசுபிக் தொலைநோக்கு வலியுறுத்துகிறது.

ஆனால் நாம் ஒன்றாக இணைந்து உருவாக்கும் தொடர்புகள் வெறுமனே பொருளாதார தொடர்புகளாக மட்டுமன்றி அதைவிடவும் அதிகமானதாக இருக்கும்.

பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுதல் என்பன அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக ஒற்றுமைக்கான எமது உறுதிப்பாட்டின் ஒரு முக்கிய அங்கமாக இருப்பதால், DFC கடன்களுக்கு பெண்களுக்குச் சொந்தமான வணிகங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை நான் குறிப்பிட்டேன். இன்று நாம் நோக்கும் பல இலக்குகளுக்கிடையிலான பொதுவான ஒரு குறுக்கு வெட்டுக் கருப்பொருள் இதுவாகும். அது மோதல்கள் மற்றும் நெருக்கடி நிலைகளின் போது பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் பாதுகாப்பை ஊக்குவிப்பதுடன் மோதலை தடுப்பதற்கும் மற்றும் அமைதியை மேம்படுத்துவதற்குமான முயற்சிகளில் பெண்களின் அர்த்தமுள்ள பங்கேற்பினையும் உள்ளடக்கியதாகும். அதனால்தான் இன்று இங்குள்ள பல பெண்களைப் பார்ப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

USAID இற்கும் இலங்கை மக்களுக்கும் இடையிலுள்ள 60 ஆண்டுகால உறவை எண்ணி நாங்கள் மிகவும் பெருமையடைகிறோம். அதனூடாக நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்திக்கு உதவிசெய்வதற்காக 2 பில்லியன் டொலர்களை அண்மித்த தொகையினை USAID வழங்கியுள்ளது. மற்றும் 1,100 இற்கும் மேற்பட்ட சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எம்மிரு நாடுகளுக்கிடையே அறிவார்ந்த பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களில் பயணிக்க உதவிசெய்த எமது அமெரிக்க – இலங்கை ஃபுல்பிரைட் நிகழ்ச்சித்திட்டத்தின் (US – Sri Lanka Fulbright program) 70ஆவது ஆண்டு நிறைவை இவ்வாண்டு நாம் கொண்டாடுகிறோம். கல்வி அமைச்சுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம், ஆரம்பப் பள்ளிப் பிள்ளைகளுக்கான பள்ளி போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள், ஆங்கில கற்பித்தல் வளங்கள், ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் மற்றும் பயிற்சி வாய்ப்புகள் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே ஆங்கில மொழிப் பயன்பாட்டை வலுப்படுத்துவதற்காக ஆங்கில மொழித் தேர்ச்சி நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகளுக்கு உதவிசெய்தல் உட்பட இலங்கையின் கல்வி அபிவிருத்தியின் அனைத்து அம்சங்களுக்கும் உதவிசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்களையும் நாம் வழங்குகிறோம்.

கலாச்சாரப் பாதுகாப்பிற்கான எமது தூதுவர்கள் நிதியத்தின் ஊடாக, இலங்கையின் செழுமையான கலாச்சார மரபுரிமையினைப் பாதுகாத்து கொண்டாடும் பன்னிரெண்டிற்கும் மேற்பட்ட செயற்திட்டங்களுக்கு உதவிசெய்வதற்காக கிட்டத்தட்ட 1.3 மில்லியன் டொலர்களை நாம் வழங்கியுள்ளோம். இந்த மாதத்திலே மாத்திரம், கண்டி அரச மாளிகை மற்றும் தொல்பொருள் அருங்காட்சியகத்தைப் பாதுகாப்பதற்காக 265,000 டொலர் பெறுமதியான நிகழ்ச்சித்திட்டத்தை நான் தொடங்கினேன், அதற்குப்பின்னர் அழிந்து வரும் உள்நாட்டு இசை மற்றும் நடன மரபுகளைப் பாதுகாக்கும் ஒரு தனியான செயற்திட்டத்தை நிறைவுசெய்வதற்கான விழாவிற்குத் தலைமை தாங்கும் சிறப்புரிமை எனக்குக் கிடைத்தது. இவை அனைத்தும் உயர்ந்த, எனினும் பொருளாதார ரீதியாக சந்தேகத்திற்குரிய, உட்கட்டமைப்பு செயற்திட்டங்களை விட நீண்ட கால, அனைவரையும் உள்ளடக்கிய, நிலையான திறன் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் வகையிலான உண்மையான மற்றும் ஆழமான பங்காண்மைக்கான உதாரணங்கள் என நான் நம்புகிறேன்

இன்னும் விரிவாகப் பார்க்கும்போது, நட்புநாடுகள் மற்றும் பங்குதாரர்களுக்கு நாம் தொடர்ந்தும் உதவிசெய்து அவர்களை வலுப்படுத்துவதுடன் “குவாட்” போன்ற குழுக்களில் எங்கள் கூட்டுப் பலத்தை ஒன்றுசேர்ப்பதற்காக ஒன்றிணைந்து பணியாற்றுவோம். அவுஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவை உள்ளடக்கிய குவாட் உறுப்பினர்கள் - பிராந்தியத்தில் ஜனநாயகம், அமைதி, பாதுகாப்பு மற்றும் செழிப்பிற்கான ஒரு கூட்டு உறுதிப்பாட்டை பகிர்ந்து

கொள்கின்றனர். கடந்த மாதம் வெளிடப்பட்ட முதன்முதலான அமைச்சர் இணை அறிக்கையில், குவாட் வெளியுறவு அமைச்சர்கள் 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 1.3 பில்லியனுக்கும் அதிகமான கொவிட்-19 தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்குவதற்கான குவாட் அமைப்பின் உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், கடல்சார் பாதுகாப்பு, மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்த்த நிவாரணம், இணையப் பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு, மக்களுக்கு இடையேயான உறவுகளை கட்டியெழுப்புதல் மற்றும் மேலும் பலவற்றில் ஒத்துழைப்பை ஆழமாக்குதல் ஆகிய விடயங்கள் தொடர்பான திடமான முயற்சிகளை விவரித்தனர். கூட்டத்தில் அமைச்சர் ஒருவர் கூறியவாறு, "குவாட் என்பது நாம் எதற்காக இருக்கிறோம் என்பதைப் பற்றியதே அன்றி, நாம் எதற்கு எதிராக இருக்கிறோம் என்பதைப் பற்றியது அல்ல."

இணைக்கப்பட்ட ஒரு இந்தோ-பசுபிக்கை உருவாக்குவதற்கு ஒன்றிணைந்து பணியாற்றுவதன் அர்த்தம் இதுதான்.

கொவிட் பெருந்தொற்றின் போது நாம் ஒன்றைக் கற்றுக்கொண்டது போல, **"மீள்தன்மை"** இனைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு முக்கியமானது. இதனால்தான் கொவிட் தடுப்பூசிகளை வழங்குவதற்கான உலகளாவிய முன்முயற்சியான COVAX இற்கு மிகவும் தாராளமாக நன்கொடை அளிக்கும் நாடாக அமெரிக்கா விளங்குகிறது. பெருந்தொற்றிற்கான இலங்கையின் பதிலளிப்பு மற்றும் மீட்சிக்கு உதவிசெய்வதற்காக வழங்கப்பட்ட கிட்டத்தட்ட 18 மில்லியன் டொலர் பெறுமதியான உதவிகளின் அடிப்படையில் சுமார் 3.4 மில்லியன் தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்கியமை உட்பட இலங்கையுடன் நாம் நெருக்கமாகப் பணியாற்றி வருகிறோம்.

நிச்சயமாக, காலநிலை மாற்றத்தின் தாக்கம் என்பது எமது மிக முக்கியமான நீண்டகால உலகளாவிய சவால்களில் ஒன்றாகும். ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷ குறிப்பிட்டவாறு, "பெருந்தொற்றின் விளைவுகள் மனிதகுலத்திற்கு ஏற்படுத்திய பேரழிவைப் போன்றே, எதிர்வரும் தசாப்தங்களில் காலநிலை மாற்றத்தின் இன்னும் பெரிய சவாலை உலகம் எதிர்கொள்கிறது."

காலநிலை மாற்றத்தை தாங்கி விரைவாக மீண்டுவரக்கூடிய மீள்தன்மையினை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். அதனால்தான் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு காலநிலை நெருக்கடியைச் சமாளிப்பதற்கு உதவுவதற்காக எமது பொது சர்வதேச நிதியளிப்பினை இரட்டிப்பாக்க அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது. எங்கள் கூடுதல் உதவி மற்றும் அதிகரித்த தனியார் மூலதனம் மற்றும் பிற நன்கொடையாளர்களின் ஆதரவுடன், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் காலநிலை நடவடிக்கைகளுக்கு உதவியாக 100 பில்லியன் டொலர்களைத் திரட்டும் இலக்கை அடைவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம்.

USAID ஊடாக, புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் மற்றும் நிலையான, அனைவரையும் உள்ளடக்கிய, சந்தை அடிப்படையிலான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யும் வழிகளில் காலநிலை மாற்றத்திற்கு இசைவாக்கமடையும் இலங்கையின் திறனை அதிகரிக்கும் நிகழ்ச்சிதிட்டங்களிலும் அமெரிக்கா இலங்கையுடன் இணைந்து பணியாற்றுகிறது.

ஒரு மீள்தன்மையுடைய இந்தோ-பசுபிக்தான் அதை சாதிக்க முடியும்.

எங்கள் இந்தோ-பசுபிக் மூலோபாயத்தின் ஐந்தாவது முக்கிய அம்சம் பிராந்திய **"பாதுகாப்பை"** உறுதிப்படுத்துவதாகும். அச்சுறுத்தல்கள் புதியபரிமாணங்களை எடுப்பதனாலும் புதிய பாரம்பரியமற்ற அச்சுறுத்தல்களை நாம் எதிர்கொள்வதனாலும், எமது பாதுகாப்பு அணுகுமுறையும் அதற்கேற்றவாறு பரிமாண வளர்சியடைதல் அவசியம். ஆனால், நாம் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களையும் தாண்டி, எமது மிகப்பெரிய பலமாக இருக்கும் மற்றும் தொடர்ந்தும் இருக்கப்போகும் விடயமாக எமது இந்தோ-பசுபிக் தொலைநோக்கினை ஆதரிக்கும் கூட்டணிகள் மற்றும் பங்காண்மைகள் விளங்குகின்றன.

முன்னெச்சரிக்கை மற்றும் ஈடுபாடு கொண்ட கடற்படைகள் இதில் ஒரு முக்கிய அங்கமாகும். இதனாலேயே கடந்த மாதத்தில் இந்திய, அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் பங்களாதேஷ் கடற்படைகள் உட்பட ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான கப்பல்களின் இலங்கை வருகைகள் மற்றும் கூட்டுப் பயிற்சிகளை நாம் கண்ணுற்றதில் ஆச்சரியமில்லை. அமெரிக்கா உட்பட இந்தோ-பசுபிக் முழுவதும் உள்ள நாடுகளுடன் இணைந்து "மிலன்" என பெயரிடப்பட்ட பல்தேசியப் பயிற்சியில் இலங்கையும் இணைந்து கொண்டது. இப்பயிற்சியானது கடலில் பலதரப்பு பாரிய படை நடவடிக்கைத் திறன்களை மேம்படுத்தியது மற்றும் இப்பயிற்சில் பங்குபற்றிய ஒருவர் குறிப்பிட்டவாறு, "மிகவும் ஸ்திரமான, திறந்த மற்றும் செழிப்பான இந்தோ-பசுபிக் தொடர்பான ஒரு பொதுவான தொலைநோக்கினைக் கொண்ட ஒத்த எண்ணம் கொண்ட கடற்படையினர், ஒருவர் மற்றவருடன் இணைந்து செயற்படுவதற்கும் பயிற்சி செய்வதற்குமான ஒரு வாய்ப்பை இப்பயிற்சி வழங்கியது."

இலங்கை அற்புதமான கடல் வளங்களைக் கொண்டுள்ளது எனினும் எம்மனைவருக்கும் தெரிந்தவாறு, சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத, அல்லது IUU, மீன்பிடி; கடத்தல்; மற்றும் கடற்கொள்ளை உட்பட்ட பல சவால்களை கடற் சூழல் உலகெங்கும் எதிர்கொள்கிறது. ஆகையினால்தான் இலங்கை மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுமே இந்த சவால்களை எதிர்கொள்வதற்கான சர்வதேச ஒப்பந்தங்களின் அங்கமாக விளங்குகின்றன. கடற்படை மற்றும் விமானப்படை ஆகிய இரண்டினதும் கடல்சார்ந்த பரப்பில் அவர்களது விழிப்புணர்வுத் திறன்களை மேம்படுத்துவதற்கும், கடல் ரோந்து மற்றும் தடைகள் ஆகியவற்றில் இணைந்து பணியாற்றுவதற்கு வசதிசெய்வதற்குமான பங்குதாரர்களாக அமெரிக்கா, இலங்கை கடற்படை மற்றும் இலங்கை விமானப்படை என்பன இருப்பதும் இதனாலேயாகும். இந்த பங்காண்மை மற்றும் அமெரிக்காவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கப்பல்கள் ஆகியவற்றின் ஊடாக 2020 மார்ச் மாதத்தில் இலங்கை தனது வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய போதைப்பொருள் கைப்பற்றலைப் பதிவு செய்தது. இந்த பங்காண்மை மற்றும் கப்பல்கள் MT நியூ டயமண்ட் மற்றும் எம்வி பேர்ல்-எக்ஸ்பிரஸ் போன்ற கப்பல்களில் ஏற்பட்ட தீ சம்பவங்களின் பின்னர் இலங்கையின் பெறுமதிமிக்க கடல் வளங்களைப் பாதுகாப்பதற்கும் உதவின.

மற்றும் கடல்சார்ந்த பரப்பில் விழிப்புணர்வை மேம்படுத்தவும் எதிர்கால அனர்த்தங்களின் தாக்கத்தை தடுக்கவும் மற்றும் குறைக்கவும் தொடர்ந்தும் இது போன்ற பங்காண்மைகளில் நாம் இணைந்து பணியாற்றுகிறோம். இந்த நோக்கத்திற்காக, அமெரிக்கா சமீபத்தில் மூன்றாவது உயர் தாங்குதிறன்கொண்ட கப்பல் ஒன்றை இலங்கைக்கு வழங்கியது. சியாட்டெல்லில் 130 இலங்கை மாலுமிகள் இந்த கப்பலை 2022 ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் இலங்கைக்கான அதன் பயணத்திற்காகத் தற்போது தயார் செய்து வருகின்றனர். இது இலங்கை கடற்படை வரலாற்றில் மேற்கொள்ளப்படும் மிக நீண்ட பயணமாகும்.

பாதுகாப்பான இந்தோ-பசுபிக்கிற்கான பங்காண்மை இவ்வாறுதான் இருக்கும்.

இக்கிரகத்தின் எதிர்காலத்தின் பெரும்பகுதி இப்பிராந்தியத்தில் நடைபெறும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்பதை இந்தோ-பசுபிக்கிற்கான எமது தொலைநோக்கு அங்கீகரிக்கிறது. இதனாலேயே, இந்தோ-பசுபிக்கிற்கான மற்றும் பிராந்தியத்திலுள்ள எமது நட்பு நாடுகள் மற்றும் பங்குதாரர்களுடன் ஒத்துழைப்பதற்கான ஒரு நிலையான அர்ப்பணிப்பு எம்மிடம் இருக்கிறது மற்றும் தொடர்ந்தும் எம்மிடம் அது இருக்கும். இதனால்தான், இந்தோ-பசுபிக்கின் இதயத்தில் அமைந்துள்ள இலங்கை, இந்த எதிர்காலத்தில் ஒரு முன்னணி வகிபாகத்தைக் கைப்பற்றுவதற்கு தற்போது செயற்பட முடியும்.

இந்தோ-பசுபிக் பிராந்தியத்திற்கான ஒரு பொதுவான தொலைநோக்கினை நாம் பகிர்ந்து கொள்கிறோம் என்பதைக் குறிப்பிட்டு நான் எனது உரையினை ஆரம்பித்தேன். இக்கருத்துக்கள் அத்தொலைநோக்கினை வரையறுத்துக் காட்டியுள்ளன எனவும், மிக முக்கியமாக, ஒரு சுதந்திரமான மற்றும் திறந்த, செழிப்பான, இணைக்கப்பட்ட, மீள்தன்மையுடைய மற்றும் பாதுகாப்பான இந்தோ-பசுபிக்கிற்கான ஒரு பங்காண்மை எதை அடைய முடியும் என்பதைப் பற்றிய சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டதாக நான் நம்புகிறேன்.

அடுத்து எனது நீண்ட கால நண்பரும் ஹண்டிங்டன் கடற்கரை அயலவருமான உதவிச் செயலாளர் டோன் லூவிடம் இருந்து முக்கிய உரையினைச் செவிமடுப்பது எமக்குக்கிடைத்த அதிர்ஷ்டமாகும் - எனினும் அவரது முழு வாழ்க்கை வரலாற்றையும் கூறி தெகுப்பாளரின் வாய்ப்பினைப் பறிக்க நான் விரும்பவில்லை.

ஒரு வெற்றிகரமான மாநாட்டிற்கு எனது வாழ்த்துக்களைக் கூறி நன்றியுடன் விடைபெறுகிறேன்.